# சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இடம்பெறும் மயில்கட்டுத் திருவிழாவும் மரபுவழியான சம்பிரதாயங்களும்

முத்துலிங்கம் பவித்திரா[1], வி.பவனேசன்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

*கிழக்கிலங்கை வழிபாட்டு மரபில் முருக வழிபாடு பிரசித்தமானது. அங்கு இயற்றப்படுகின்ற முருகவழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ள திருப்படைக் கோயில்களுக்குக் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு. கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களின் வழிபாட்டு முறைகள் பல்பரிமாணத்தன்மை கொண்டவையாகும். திருப்படைக் கோயில்களுள் சிறப்பானதும் தனித்துவமானதுமான ஒன்றாகச் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் காணப்படுகின்றது. திருப்படைக் கோயில்களுள் இவ்வாலயத்தில் மாத்திரமே ஆகமம்சார்ந்த வழிபாடு, ஆகமம்சாரா வழிபாடு ஆகியவற்றுடன் சமூகவழமைகளும் இணைவுற்றுக் காணப்படுகின்றன. அந்தவகையில் மயில்கட்டுத் திருவிழாவும் அதில் இடம்பெறும் மரபுவழியான சம்பிரதாயங்களும் அதன் தனித்துவத்தினை எடுத்தியம்புகின்றன. இவ்வாலயத்தில் ஆகமமுறையிலான வழிபாடுகளும், மரபுவழியான சம்பிரதாயங்களை அடியொற்றிய வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலில் இடம்பெறும் மரபுவழியான சம்பிரதாயங்களில் ஒன்றாக அடையாளப்படுத்தப்படும் மயில்கட்டுத் திருவிழாவை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மனித மனத்தின் வெளிப்பாடு பண்பாடு ஆகும். இதில் சமூகத்தளமும், சமூக மனமும் சமயத்தளத்தோடும், சமய மனத்தோடும் இணைவுற்றுக் காணப்படுகின்றன. பெருஞ்சமயக் கடவுளர்களுக்கு வருடந்தோறும் உற்சவத்தில் திருக்கல்யாணம் இடம்பெறுகின்றது. திருக்கல்யாணம் தமிழரின் யதார்த்த வாழ்வில் நிகழ்த்தப்படும் திருமணங்கள் போலச் செய்தலாகவேயுள்ளன. வாழ்வியல் சடங்கிற்கும் தெய்விக திருக்கல்யாணச் சடங்கிற்கும் ஒற்றுமை உள்ளதால் சமூக மனமும் ஒன்றையொன்று பரஸ்பரத்தை பிரதிபலிப்பதாகவேயுள்ளது. தெய்வானை இந்திரனின் சபையில் மறுபிறவியெடுத்தமையால் முருகனுக்கும் தெய்வானைக்கும் உயர்ந்த ஆசார முறைப்படி திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. ஆனால் வள்ளியும் திருமாலில் மகளாக குறிப்பிடப்பட்டாலும் அவள் பிறந்த வேட குலமரபிற்கு ஏற்ப வள்ளி திருமணம் நடைபெறுகின்றது. சடங்கு அல்லது திருமணமானது அச்சமுதாயத்தினர் வாழும் இடத்தைப் பொறுத்து உள்ளது. அதாவது இதில் சூழலின் தாக்கம் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் வேடகுல மரபின்படி சமஸ்கிருதத் தாக்கம் நடைபெறுவதற்கு முன்பாக தமிழருக்கு நடைபெற்ற திருமணமாக முருகன் வள்ளி திருமணம் (மயில்கட்டு) இக்கோயிலில் நடைபெறுகின்றது. இவ்வாலய உருவாக்கத்தின் பின்னரே சித்தாண்டி எனும் ஊரில் மக்கள் குடியேறினர். இதனைக் கூர்ந்து நோக்கும் போது ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு புலப்படுகின்றது. முருகனுடைய காதல் திருமணமாகவே மயில்கட்டுத் திருவிழா இடம்பெறுகின்றது. இந்த மயில்கட்டுத் திருவிழா பண்டைய தமிழர் முறைப்படி நடைபெறுவதால், இத்திருமணம் அவ்வூர் மக்களின் வாழ்வியலில் செல்வாக்குச் செலுத்துகின்றது. வாழ்வியல் சடங்கிற்கும், தெய்விகச் சடங்கிற்குமிடையே ஒப்புவமை நோக்கப்படுகின்றது. சாதாரண பாமர மக்களுக்கும், இறைவனுக்குமிடையேயுள்ள தொடர்பு ஒப்புவமை நோக்கப்பட்டு கடவுளர்களாக இருந்தாலும் சமூக வழக்கங்களுக்குட்பட்டு நடக்க வேண்டும் என்பது இம்மயில்கட்டுத் திருவிழாவினூடாக எடுத்தியம்பப்படுகின்றது. இந்த ஆய்வில் விபரண ஆய்வு, ஒப்பீட்டாய்வு, பகுப்பாய்வு, வரலாற்றியல் ஆய்வு முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் பற்றி ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு இந்த ஆய்வு ஒரு முன்னோடியாக அமையும்.*

**திறவுச்சொற்கள்:** மயில்கட்டு, திருக்கல்யாணம், முருகன், வள்ளி, தெய்வயானை

[1]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
*mpavirahavi@gmail.com*
[2]இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

இலங்கைக்கும் இந்தியாவிற்குமுள்ள தொடர்பு காரணமாக இந்தியப் பண்பாடு இலங்கையில் பரவியது. இலங்கையில் இந்து சமயமானது வணிகத்தொடர்பு, இந்தியத் தீபகற்பத்திற்கு அருகாமையில் உள்ளமை, இந்தியர்களின் படையெடுப்பு, கடல்மார்க்கப் பாதையின் ஊடாக இலகுவாக வந்தடையும் விதம் முதலிய பல காரணங்களினால் அந்நாட்டு மக்களின் சம்பிரதாயங்கள் இலங்கையில் பரவின. கிடைக்கப்பெற்ற தொல் பொருட்சின்னங்கள், கல்வெட்டுக்கள் முதலிய ஆதாரங்கள் கிழக்கிலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையில் வழிபாட்டம்சங்களில் தொடர்பிருந்தமையை வலுவூட்டுகின்றன. கிழக்கிலங்கை வழிபாட்டு மரபில் முருக வழிபாடு பிரசித்தமானது. அங்கு இயற்றப்படுகின்ற முருக வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ள திருப்படைக் கோயில்களுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு. கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களின் வழிபாட்டு முறைகள் பல்பரிமாணத்தன்மை கொண்டவை. அவற்றிலே ஆகம முறையிலான வழிபாடுகளும், மரபுவழியான சம்பிரதாயங்களை அடியொற்றி வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

கிழக்கிலங்கையில் கதிரவெளி, மகியங்கனை, விந்தன, வெல்லச, தீகவாவி, உகனை, திஸமஹாராம முதலிய இடங்களில் பெருங்கற்காலச் சின்னங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை சிவன், முருகன், கொற்றவை முதலிய தெய்வங்களுக்குரிய வழிபாட்டுச் சின்னங்களாகும். இலங்கையின் ஆதிக்குடிகள் ஒஸ்ரலோயிட் இனத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் கிழக்கிலங்கையில் செறிந்து வாழ்கின்றனர். கிழக்கிலங்கையில் முருக ஆலயங்கள் பலவற்றில் வேடர் சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன. கதிரவெளியில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன அவை ஒருதலை, இருதலை, முத்தலைச் சூலங்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் ஆகும். சிவன், முருகன் வணக்கத்திற்குரிய சின்னங்கள் ஆகும். கதிரவெளியில் கிடைத்த பெருங்கற்காலச் சின்னங்களின் மூலம் முருக வழிபாட்டின் தொன்மையை அறியமுடிகின்றது. அம்பாறை பிராமிக் கல்வெட்டில் ‘‘பருமுக வேலனுடைய குகை’’ (தங்கேஸ்வரி., 2008:90) எனும் வாசகம் காணப்படுகின்றது. பருமக என்பது பிரமுகன் அல்லது பிராமணர் என இடம்பெற்றுள்ளது.

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி முதலிய இலக்கியங்களில் முருகன் மலைப்பிரதேசத்திற்குரிய தெய்வமாக வழிபடப்பட்டமை பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளதுடன் முருகனுக்குத் தேனையும் தினையையும் நைவேத்தியமாக வேடர்கள் படைத்து வழிபட்டனர் என்ற குறிப்புக் காணப்படுகின்றது. தமிழிலக்கிய காலங்களிலும், கிழக்கிலங்கையிலும் முருக வணக்கத்திற்கும், வேடர்களுக்கும் தொடர்பிருந்தமையை நன்கு புலப்படுத்துகின்றது. இலங்கையில் வேடர் குலத்திற்கும் முருகனுக்கும் இடையிலுள்ள தொடர்பு வேரூன்றிய ஒன்றாகக் காணப்படுகின்றது. இலங்கையில் பழங்குடிகள் வேடர்கள் ஆவர். இவர்கள் கதிர்காம முருகனை குலக்கடவுளாக

வழிபடுகின்றனர். புராண மரபின்படி இலங்கையில் முருகன் வேடர் தலைவனின் மகளாகிய வள்ளியை மணந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

தென்னிந்தியாவில் முருகனுடைய ஆறுபடை வீடுகளுக்குத் தனித்துவமான இடம் உண்டு. அம்முருக ஆலயங்கள் படை எனும் பெயரால் அழைக்கப்படுவதைப் போன்று கிழக்கிலங்கையில் காணப்படும் முருகத் தலங்கள் திருப்படைக் கோயில்கள் என அழைக்கப்படுகின்றன. கிழக்கிலங்கையில் தொன்மையான புகழ்பெற்ற கோயில்கள் திருப்படைக் கோயில்கள் என அழைக்கப்படுகின்றது. இத்திருப்படைக் கோயில்கள் முருகன் ஆலயங்களாகவே காணப்படுகின்றன. அதாவது மூலஸ்தானத்தில் வேல் வைத்து பிரதிஸ்டை செய்யப்பட்டிருப்பதால் திருப்படைக் கோயில்கள் என அழைக்கப்படுகின்றன. அவையாவன வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோயில், சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில், கோயில் போரதீவு சித்திரவேலாயுதர் கோயில், மண்டூர் முருகன் கோயில், திருக்கோயில் சித்திர வேலாயுதர் கோயில் என்பனவாகும். அவற்றிலே ஆய்வுப் பொருண்மையைக் கருத்திற் கொண்டு சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில் மாத்திரம் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.

### சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம்

### ஆலயத்தின் வரலாறு

திருப்படைக் கோயில்களில் ஒன்றாக சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம் காணப்படுகின்றது. மட்டக்களப்பு நகருக்கு வடக்கே இருபது கிலோ மீற்றர் தொலைவில் சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் அமைந்துள்ளது. மேற்குப் பக்கமாக நெல் வயல்களும், ஏரிகளும் சேர்ந்த இயற்கை செழிப்புடன் இராஜகோபுரமும், மணிக்கோபுரமும் அமையப்பெற்று ஆலயமானது காட்சியளிக்கின்றது. இராஜகோபுரமானது ஏழுதளங்களைக் கொண்டு அத்தளங்களின் நாற்புறமும் சிவவடிவங்களும், முருகவடிவங்களும் காணப்படுகின்றது. நான்கு மூலையிலும் நான்கு கிணறுகள் அமையப்பெற்று தெற்கில் வள்ளியம்மாள் சன்னிதானத்தையும், வடக்கில் தெய்வயானை சன்னிதானத்தையும் கொண்டு காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் மீது 103 ஊஞ்சற் பாடல்களை காரைதீவைச் சேர்ந்த சீ.கதிரமலை என்பவர் பாடியுள்ளார்.

திருப்படைக் கோயில்களுள் சிறப்பானதும் தனித்துவமான ஒன்றாக சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோயில் காணப்படுகின்றது. திருப்படைக் கோயில்களில் இவ்வாலயத்தில் மாத்திரமே ஆகமம்சார்ந்த வழிபாடு, ஆகமம்சாரா வழிபாடு, சமூகவழமைகளும் இணைவுற்று காணப்படுகின்றமை அதன் தனித்துவத்தினை எடுத்தியம்புகின்றது. இவ்வாலயம் தொடர்பாக வரலாற்று சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறாமையினால் பல்வேறு கர்ண பரம்பரைக் கதைகள் காணப்படுகின்றன. கர்ண பரம்பரைக் கதையின்படி ஆதிகாலத்தில் இந்தியாவிலிருந்து கால்நடையாக யாத்திரை மேற்கொண்ட சிகண்டி முனிவர் இவ்விடத்திற்கு

வருகைதந்து அத்திமர நிழலின் கீழிருந்து தவம் செய்த போது அங்கு வசித்த வேடர்கள் முனிவரைத் தொழுதனர் என்றும் அவ்மரத்தடியில் அவ் முனிவர் வேல் ஒன்றை நட்டு வழிபட்டார் என்றும் சிகண்டி முனிவர் சித்தர் என்பதாலும் ஆண்டியாக அவ்விடத்தில் வந்ததாலும் சித்து+ஆண்டி ஆகிய இரு சொற்கள் இணைந்து சித்தாண்டி என அழைக்கப்பட்டது. (தங்கேஸ்வரி, 2008:90)

மற்றுமொரு மரபுவழிக் கதையின்படி சித்தாண்டி முருகன் கோயில் வேளாளப் பெருங்குடி மக்களின் முயற்சியால் அமைக்கப்பட்டது என்றும் சிகண்டி முனிவர் அவரிடமிருந்த இரும்பு வேலாயுதத்தை சிறுகுடிசையில் வைத்துப் பூசித்தாரென்றும் இதனையறிந்து அங்கு சென்று வழிபட்ட மக்களுக்கு முனிவர் இஷ்ட சித்திகளைப் கொடுத்தார் எனவும் கூறப்படுகின்றது. இம்முனிவர் சித்து வேலைகளைச் செய்தமையால் சித்தர் என்றும் நீறுபூத்த மேனியுடனும், உருத்திராங்க கோலத்துடனும் அவருடைய தோற்றம் காணப்பட்டமையால் ஆண்டி என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். இவ்விரு பெயர்களின் இணைப்பே சித்தாண்டி எனப் பெயர் பெற்றது.(கந்தையா,வீ.சி., 1991:83)

மற்றுமொரு செவிவழிக் கதையின்படி ஆண்டி ஒருவன் காட்டு மார்க்கமாகச் சென்ற போது மதயானை ஒன்று வழிமறித்ததாகவும் இச் சந்தர்ப்பத்தில் ஆண்டி முருகனை நினைத்து அபயக்குரல் கொடுத்தார் என்றும் அதன்போது முருகன் அழகிய வேடத்துடன் ஆண்டி முன் தோன்றி மதயானையைக் கொன்று காத்தருளியதால் ஆண்டி சித்திரவேல் ஒன்றை வைத்துப் பூசித்து வந்தார் என்றும் அவ்வேல் பல அற்புத சாதனைகளைச் செய்தமையால் சித்திரவேலாயுத சுவாமி என்ற காரணப் பெயர் சித்தாண்டி முருகனுக்கு ஏற்பட்டது என ஆரையூர் நல்.அளகேசமுதலி எழுதியுள்ள சித்தாண்டி தலபுராணச் செய்யுளில் இடம்பெற்றுள்ளது. (மித்தியு, எஸ்.ஏ.ஐ., 2009:70)

"பத்தியிற் றோய்ந்து
ஞானப் பரமனார் கருணை மேவிச்
சித்துக்கள் மனத்தாற் செய்த
சிகண்டியா மாண்டியானோர்…."

சித்தாண்டி முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவப் பெருவிழா ஆடிமாதப் பிரதமையில் கொடியேற்றம் ஆரம்பமாகி பௌர்ணமி தினத்தில் தீர்த்தம் இடம்பெறும். இங்கு குடிவாரியாக திருவிழா நடைபெறுகின்றது. முதலாம், இரண்டாம் நாள் திருவிழா கோயில் நிருவாகத்தினராலும், மூன்றாம் திருவிழா வன்னிமையினாலும், நான்காம் திருவிழா புதூர் குடி மக்களாலும், ஐந்தாம் திருவிழா அத்தியாகுடி மக்களாலும், ஆறாம் திருவிழா கங்காணிப்போடி மக்களாலும், ஏழாம் திருவிழா பட்டியன் குடி மக்களாலும், எட்டாம் திருவிழா சவரத் தொழிலாளர்களாலும், ஒன்பதாம் திருவிழா சலவைத் தொழிலாளர்களாலும், பத்தாம் திருவிழா பொன்னையா வன்னியனாராலும், பதினொராம் திருவிழா கோயில் குடி மக்களாலும்,

பதின்மூன்றாம் திருவிழா சந்தாபணிக்கர் குடியினராலும், பதிநான்காம் நாள் திருவிழா சிறுகுஞ்சாப்போடி மக்களாலும், பதினைந்தாம் நாள் திருவிழா பரமக்குட்டி மக்களாலும் நடாத்தப்பட்டு வருகின்றது.

**மயில்கட்டுத் திருவிழா**

முருகன், வள்ளிக்கு நடைபெறும் திருக்கல்யாணச் சடங்கு இவ்வாலயத்தில் மயில்கட்டுத் திருவிழா என அழைக்கப்படுகின்றது. மயில்கட்டுத் திருவிழாவின் போது ஹோமம் மேற்கொண்டு இக்ஹோமத்தில் 1008 மூலிகைகள் இடப்பட்டு முருகனை ஆவாகணம் செய்தலே மயில்கட்டுத் திருவிழா என அழைக்கப்படுகின்றது. ஆலயத்தின் மகோற்சவத்தில் 13ம், 14ம், 15ம் நாட்களில் மயில்கட்டுத் திருவிழா நடைபெறுகின்றது. இந்நாட்களில் 13ம் நாள் உற்சவத்திலே முருகன், வள்ளிக்கு திருக்கல்யாணம் இடம்பெறுகின்றது.

ஆகமம் சார்ந்த ஆலயங்களில் மூலமூர்த்திக்கு திருக்கல்யாணச் சடங்கு நடாத்தப்படுவது வழமையாகும் ஆனால் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் முருகன், வள்ளிக்கு நடைபெறும் திருமணமானது திருக்கல்யாணம் என அழைக்கப்படாமல் மாறாக மயில்கட்டுத் திருவிழா என்றே அழைக்கின்றனர். பொதுவாக கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆலயங்கள் ஆகமம்சார்ந்த ஆலயங்கள் என அழைக்கப்படுகின்றது. இவ்வகையான ஆலயங்களில் பெரும்பாலும் திருக்கல்யாணச் சடங்கு மகோற்சவம் நடைபெற்று கொடியிறக்கத்தின் பின்னர் இடம்பெறும். ஆனால் சித்தாண்டி முருகன் ஆலயத்தில் மகோற்சவக் கிரியைகளின் போது அதாவது பதின்மூன்றாம் நாள் தொடங்கி தீர்த்தோற்சவம் நடைபெறும் அந்நாட்களில் நடைபெறும் திருவிழா மயில்கட்டுத் திருவிழா எனும் நாமத்திலே திருக்கல்யாணம் இடம்பெறுகின்றது. இதற்காக விசேட ஹோமம் நடாத்தப்படுகின்றது.

பொதுவாக ஆலயங்களில் இடம்பெறும் ஹோமத்தை பக்தர்களால் பார்வையிட முடிவதுடன் ஆகுதியில் இடப்படும் பொருட்களிலிருந்து வரும் புகையினை அவர்களால் கிரகிக்க முடியும். ஆனால் இவ்வாலயத்தில் சற்று வித்தியாசமான முறையில் இடம்பெறுகின்றது. அதாவது ஹோமத்தை அவர்களால் பார்வையிடவோ, புகையினை சுவாசிக்கவோ முடியாது. ஹோமம் மேற்கொள்ளும் போது ஆலயத்தினுடைய கருப்பக்கிரகம், நிருத்தமண்டபம், ஆறுமுகசாமி மண்டபம் முதலிய மண்டபங்கள் மூடப்பட்டு அதனுள்ளே ஆறுமுகசாமிக்கும், கர்ப்பக்கிரகத்திலிருக்கும் மூர்த்திக்கும்(வேல்), அஷ்டதிக்பாலகர்களுக்கும், வள்ளி, தெய்வானை முதலிய தெய்வங்களுக்கும் கும்பங்கள் பிரஸ்தாபனம் செய்து அக்கும்பத்தில் ஆறுமுகப் பெருமானை ஆச்சார்யார்கள் ஆவாகணம் செய்வர். இதன் போது சண்முகப்பெருமானை ஆவாகணம் செய்வதை பக்தர்களால் பார்வையிட முடியாது. முருகனை ஆவாகணம் செய்யும் இடத்தில் ஆலய எஜமான், வண்ணக்கர், உற்சவத்தின் பிரதம சிவாச்சாரியார், ஆலய குருக்கள், ஆலயத்தொண்டர் இருவர், முதலியோர் மாத்திரமே

ஹோமம் நடைபெறும் இடத்தில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். (நேர்காணல்: சிவஸ்ரீ ச.வசந்தன் குருக்கள், வயது: 45, 2021.10.05)

ஆலயத்தினுள் நள்ளிரவு 12.00 மணிக்கு ஹோமம் ஆரம்பமாகும். 12.00 மணி தொடக்கம் 1.45 மணி வரை சுமார் ஒரு மணித்தியாலமும் நாற்பத்தைந்து நிமிடங்கள் ஹோமம் இடம்பெறும். விசேட யாகம் வளர்க்கப்பட்டு அக் ஹோமத் தீயில் 1008 மூலிகைகள், ஓமத்திரவியங்கள் முதலியன இறைவனுக்கு சமர்பிக்கப்பட்டு முருகனுடைய மூலமந்திரம், மூல ஆகமங்கள் உச்சரிக்கப்பட்டு வேள்வி இடம்பெறுகின்றது. 1008 சகஸ்ரநாமம் கூறி உபகாரங்களின் போது இறைவனுக்கு மூலிகைகள் சமர்பிக்கப்படும். ஹோமம் நடைபெறும் அறை மூடப்பட்டு காணப்படுவதனால் அவ்வறை புகை மண்டலமாக காட்சியளிக்கும். முருகனை ஆவாகணம் செய்யும் போது அவர் உடன் காட்சியளிப்பதில்லை பக்தர்களின் பக்தி பிரவாகத்தினாலே ஆறுமுகப்பெருமான் உருவேறி காட்சி கொடுப்பதற்காக அவ்வறையினுள் இருப்பவர்கள் குறிப்பிடுகின்றனர்(சிலை). ஹோமத்தின் போது ஆறுமுகசாமியானது சிறிது சிறிதாக அசைவினைக் காட்டுவதாகவும் ஆனால் கையில் வந்து ஏறப்பெறுவதில்லை எனவும் மக்களின் பக்தி கூக்குரலினாலே யாகம் இடம்பெறும் இடத்தில் ஆறுமுகப்பெருமான் ஒளி வடிவமாக காட்சியளித்து ஆலயத்தின் யாகசாலையிலிருப்பவர்களின் கையில் ஏறப்பெறுவார் என ஹோமம் நடைபெறும் இடத்திலிருப்பவர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வொளி வடிவம் தென்பட்டவுடன் யாகத்தின் போது ஆவாகணம் செய்த கும்ப நீரைக் கொண்டு கர்ப்பக்கிரகத்திலிருக்கும் தங்கவேல் முருகனுக்கும், சண்முகனுக்கும், அபிஷேகம் மேற்கொள்வர் (நேர்காணல்: உ.புஸ்பராஜ குருக்கள், வயது:52, 2021.10.13)

திருக்கல்யாணத்திற்கு முருகனை வரவேற்பதற்காகவே இந்த ஹோமம் இடம்பெறுகின்றது. ஹோமம் நடைபெறுகின்ற இடத்திலிருப்பவர்கள் அவர்களுடைய இருகைகளை விரித்துக் கொண்டிருக்கும் போது யாருடைய கையில் வரும் (ஆறுமுகப்பெருமான்) என்பதை அறியமுடியாது எனவும் யாருடைய கையில் கிடைக்கின்றதோ அவர்கள் அவ் ஆறுமுகசாமியின் திருவுருவத்தை எடுத்துக் கொண்டு வந்து மயிலில் ஏற்றுவதாக குறிப்பிடுகின்றனர். அத்துடன் ஆலயத்தினுள் இருப்பவர்கள் மூர்ச்சையடைந்து, உணர்வற்று இருப்பார்கள் எனக் குறிப்பிடுகின்றனர். ஹோமம் மேற்கொள்ளும் போது தோன்றும் ஒளிப்பிழம்பு பிரகாசமாக காணப்படும் எனவும் ஒளிப்பிழம்பு தோன்றிய பின்னர் ஹோமம் நடைபெறுகின்ற இடத்திலிருப்பவர்களுக்கு என்ன நடைபெறுகின்றது என்பதை உணரமுடியாது எனவும் அவர்கள் எல்லோரும் மூர்ச்சையடைந்து காணப்படுவர் எனக் குறிப்பிடுகின்றனர். ஆறுமுகசாமி யாருடைய கையிலிருக்கின்றதோ அவர்கள் உணர்வற்ற நிலையில் அச்சிலையினை கொண்டு வந்து மயிலில் கொண்டு வந்து ஏற்றுவதாக குறிப்பிடுகின்றனர்.

மயில்கட்டுத் திருவிழா நடைபெறும் நாட்களில் வள்ளியம்மாளின் சன்னிதானம் விசேட அலங்காரத்துடன் காட்சியளிக்கும். திருமணக்கால் நாட்டப்பட்டு தென்னங்குருத்தோலையினால்

அலங்கரிக்கப்பட்டு வள்ளியம்மாள் சன்னிதானம் திருமணக்கோலத்துடன் காட்சியளிக்கும். திருமண உணவாக திணை, வதையுடன் காணப்படும் தேன், பச்சைப் பாக்கு, வெற்றிலை. வடை, பஞ்சாமிர்தம், சக்கரைப் பெங்கல், பழவகை, தென்னம் பாலை, கமுகம் பாலை முதலிய பொருட்கள் அப்பந்தலை அலங்கரித்த வண்ணம் திருமணப்பந்தல் காட்சியளிக்கும். பந்தலின் முன்பாக வாழைமரம் கட்டப்பட்டு விசேட உணவுப்பண்டங்கள் குருத்தோலையினால் கட்டி தொங்க விடப்பட்டு காட்சியளிக்கும். (நேர்காணல்: ந.தாமோதிரம், வயது:65, 2021.10.05) திருமணப்பந்தல் வள்ளியின் சன்னிதானத்துடன் இணைத்து அதன் முற்றத்தில் கட்டப்பட்டிருக்கும் இவ்வாறு அலங்கரித்த பந்தலினுள் பரிவாரத் தெய்வங்களை கொண்டு வைப்பர். (இவர்கள் திருமணத்திற்கு கலந்துகொள்ள வருபவர்களாக உருவகிப்பர்.)

வேள்வி யாகம் நிறைவு பெற்றதும் அதிகாலை 05 மணியளவில் ஆறுமுகக் கடவுளை (ஆறுமுருகன், வள்ளி, தெய்வானையுடன் இணைத்து செய்த சிறிய சிலை) மயிலில் இருத்தி வள்ளியம்மாள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று இருவருக்கும் திருக்கல்யாணம் இடம்பெறும். ஆறுமுகப்பெருமான் திருமணத்திற்காக வள்ளியம்மாள் சன்னிதானத்திற்குச் செல்வதற்கு முன்னரே அச் சன்னிதானத்தில் பார்வதி, முருகன், விநாயகர் முன்னதாக சென்று திருக்கல்யாணம் இடம்பெறும் இடத்தில் வீற்றிருப்பர். சிவன், அம்பாள், விநாயகர், முத்துக்குமாரசாமி, முதலிய பரிவார மூர்த்திகளின் முன்னிலையில் திருமணம் நடைபெறும். இதன் போது இறைவனின் திருவுருவத்தை மறைத்து ஓர் சீலைத் துணியினால் மூடி வள்ளி அம்பாள் பிரகாரத்திற்கு அழைத்துச் சென்று பின்னர் திரை போட்டு வள்ளியம்மாளுக்கு விசேட அலங்காரம் மேற்கொண்டு திருமணம் இடம்பெறும் அதாவது இருவருக்கும் இருகரங்கள் சேர்த்து ஒருமித்து மனம் சேர்தல் இடம்பெறும். (நேர்காணல்: ந.தாமோதிரம், வயது:65, 2021.10.05) இதன் போது திருமாங்கல்யம் அணிவித்தல் இடம்பெறுவதில்லை. இதனைத் தொடர்ந்து சிறப்பு பூஜைகள் இடம்பெறும். திருக்கல்யாணம் வள்ளியம்மாள் சன்னிதானத்தில் திரைமூடிய வண்ணம் இடம்பெறும். திருமணத்தின் போது வள்ளியம்மானை பாடல் பாடப்படும் இவ்வம்மானையில் வள்ளியினுடைய பிறப்பு, திணைபுலம் காக்கச் செல்லும் போது முருகன் வள்ளியை களவுத் திருமணம் செய்த அனைத்தையும் கூறி பாடல் பாடப்படுகின்றன. மயில்கட்டுத் திருவிழா அன்று மாத்திரமே வள்ளியம்மானை நூல் இருக்கும் பெட்டி திறக்கப்பட்டு அப்பாடல் பாடப்படும். திருமணத்தின் போது விசேட தீபங்கள் காட்டப்படுகின்றன.

மயில்கட்டு நடைபெறுகின்ற போது ஹோமம் நடைபெற்று உருவேறப்பெற்ற முருகன் சிலையினை மூடிச் செல்வதற்கான காரணத்தை குறிப்பிடுகின்ற போது ஆறுமுகத்தின் அதீத சக்தியை அடியவர்களால் நேரடியாக கிரகிக்க முடியாது என்பதால் இறைவனை மூடிச்செல்கின்றனர். இறைவனின் சக்தியை மயிலில் ஏற்றி வைப்பதால் மயில்கட்டுத் திருவிழா என அழைக்கப்படுகின்றது. பொதுவாக திருவிழா நடைபெறும் நாட்களில் முருகப்பெருமான் மயிலில் வலம் வந்தாலும் மயில்கட்டுத் திருவிழாவின் போது செல்வதற்கென பிரத்தியேகமான மயில் காணப்படுகின்றது. மயில்கட்டுத் திருவிழா இடம்பெறும் நாட்களில் காலையில்

நடைபெறும் உற்சவத்தில் மாத்திரம் பிரத்தியேகமான மயிலில் உலா வருவார். வேள்வி யாகத்தின் பயனும், உற்சவத்தின் பலன்களும் கிராமத்தில் வசிப்பவர்களுக்கு கிடைப்பதற்காக இடம்பெறுகின்றது. அகிலத்தில் அதர்மங்களை நீக்குமுகமாக உத்வாசனம் (அபிஷேகம்) செய்தல் மயில்கட்டுத் திருவிழா எனப்படும். ஹோமம் வளர்க்கப்பட்டு அச்சக்தியினால் முருகன் கைகளில் தானாக ஏறப்பெற்று மயிலில் ஏறிவருதலே மயில்கட்டு திருவிழா என அழைக்கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை முதலியவற்றை ஒடுக்கி அடியவருக்கு சாரித்தியமான (சாந்தமான) அருளைக் கொடுத்து நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகுப்பதற்காகவே மயில்கட்டுத் திருவிழா இடம்பெறுகின்றது.

**ஆலயத்தின் சமூகப் பின்னணி**

சித்தாண்டி பகுதியில் குடியேற்றங்களை அமைத்த மக்களுக்கு பேரில்லாவெளியிலிருந்து வேட வன்னியன் தலைவனாக ஆட்சி செய்து வந்தான் என்றும் அவனின் கீழ் கோயில் இயங்கி வந்ததாக மரபுவழிக்கதைகள் குறிப்பிடுகின்றன. அதே போன்று பொலனறுவை வேட வன்னியனும், அவனது குடும்பத்தினரும் பெருமாவெளியில் குடியேறி விவசாயத்தை மேற்கொண்டிருப்பதை அறிந்து தம்பலகாமத்திலிருந்து இவ்வாலயத்தை நிர்வகித்த பூபாலகோத்திர வன்னிமை அவ் வேட வன்னியனை சந்தித்து தங்களுக்குள் திருமணப்பந்தத்தை ஏற்படுத்தி உறவினர்களாகினர் என மரபுவழிக்கதை குறிப்பிடுகின்றது. திருமண பந்தத்தை ஏற்படுத்திய தம்பதிகளுக்கு ஆண் குழந்தை பிறப்பதற்கு முன்னர் தம்பலகாமத்து வன்னியன் தன்னுடைய ஊருக்குச் சென்று விட்டார் என்றும் இதன் பின் அக்குழந்தை வளர்ந்து தன் தந்தையைத் தேடிச் சென்ற போது அவனுடைய தந்தை செப்புப்பட்டயம் ஒன்றை வழங்கினார் என்றும் அவ் செப்புப்பட்டயத்தைக் கொண்டு சித்தாண்டியில் கோயில் பணிபுரிந்தான் என மரபுவழிக்கதை காணப்படுகின்றது. (குணபாலசிங்கம், வ., 2013:25)

தென்னிந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் இருந்த படைப்பிரிவுகளில் வன்னியனுக்கு முக்கியத்துவம் கொடுத்து வன்னி நாயகன் எனும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது. சோழராட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இவர்கள் குறுநில மன்னர்களாக ஆட்சிபுரிந்தனர். இவர்களுடைய ஆட்சி கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய இடங்களில் ஆட்சி சிறப்புப் பெற்றிருந்தது. பிற்காலங்களில் சிங்களவர், வேடுவர், முக்குவர், வெள்ளாளர் முதலிய குடிகளின் தலைமைப் பதவிகளை வகித்தவர்களும் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர். (குணபாலசிங்கம், வ., 2013:27) மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து நோக்கும் போது சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோயிலிற்கும் வேட வன்னியனுக்கும், தம்பலகாமத்து வன்னியனுக்குமிடையே தொடர்பு இருந்துள்ளமையை அறியமுடிகின்றது. மேலும் இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் மரபுவழிக் கதைகளிலும் வேடர்கள் தொடர்புற்றுள்ளனர். இவ்வாலயத்தில் நடைபெறும் சம்பிரதாயங்களும் வேட சம்பிரதாயங்களை ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

புராண மரபின்படி வள்ளி வேட குலப் பெண் என்றும் முருகன் அவளைத் திருமணம் செய்து கொண்டான் எனும் குறிப்பு காணப்படுகின்றது. வேடர்களின் வழிபாட்டிலும் முருகனுக்கு தனியிடமுண்டு ஏனெனின் இவர்களும், முருகனும் உறவினர்கள் இதன் காரணமாகவே இவ்வாலயத்தில் பண்டைக்காலம் முதல் முருகனுக்கும் வள்ளிக்கும் திருமணம் செய்து பெரிய விழாவாக இவ்வாலயத்தில் கொண்டாடியிருக்க வேண்டும். காலப்போக்கில் இவ்வாலயத்தில் சில சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு கும்பாபிஷேகம் மேற்கொண்டாலும் தங்களுடைய வழமையான சடங்குகளிலிருந்து வள்ளி திருமணத்தை பிரித்து புறந்தள்ள முடியாமை ஏற்பட்டிருக்கலாம் எனவேதான் வழமையான முருக ஆலயங்களில் இடம்பெறுவது போன்று கொடியிறக்கத்தின் பின்னர் இத்திருக்கல்யாணச் சடங்கு நடத்தப்படாமல் திருவிழா உற்சவத்தில் முக்கிய திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். மரபுப்படி வழக்கமுறைகளை மாற்றாமல் இன்றும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

திருக்கல்யாணத்திற்கு பெரும்பாலும் ஹோமம் நடத்தப்படுவதில்லை அவ்வாறு நடைபெற்றால் அக்ஹோமங்களை எல்லோராலும் பார்வையிட முடியும். ஆனால் இவ்வாலயத்தில் நள்ளிரவில் ஹோமம் நடத்தப்பட்டு திருக்கல்யாணத்திற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றது. இவை மூடியே இடம்பெறுகின்றது. பொதுவாக பழங்குடிகள் தங்களுடைய செய்திகளை வெளிப்படுத்துவதற்கு புகையிட்டே வெளிப்படுத்துவர். அவர்களின் திருமண வைபகத்தின் போதும் இடையூறுகள் வராமலிருப்பதற்காக புகை காட்டி பூச்சிகளை களைத்து திருமணத்தை நடத்துகின்றனர். இவ்வாலயத்தில் ஹோமம் இடம்பெறும் போது கர்ப்பக்கிரகம், நிருத்தமண்டபம், ஆறுமுகசாமி மண்டபம் முதலிய மண்டபங்கள் மூடப்பட்டு புகை வெளியில் செல்லாவண்ணம் முருகனை ஆவாகணம் செய்து திருமணப்பந்தலுக்கு அழைத்துச் செல்வது இதனுடைய வழிக்கடத்தல்களாகவும் இருக்கலாம். முருகன் தங்களுடைய குலப் பெண்ணான வள்ளியைத் திருமணம் செய்தவர் என்பதனால் அவர்களுடைய திருக்கல்யாணமும் அவர்களுடைய குலமரபிற்கு ஏற்ப மாற்றத்தை ஏற்படுத்தாமல் மேற்கொள்ள வேண்டும் என இப்பாரம்பரியத்தை மேற்கொண்டிருக்கலாம்.

**பண்டைய மரபுபேணல்**

பழந்தமிழர்களின் வழிபாடே ஆகமம்சாரா வழிபாடு என அழைக்கப்படுகின்றது. இவ்வழிபாட்டில் வடமொழியினரின் ஆதிக்கமும், சமஸ்கிருத மந்திரங்களும் இடம்பெறுவதில்லை. பண்டைத் தமிழரின் திருமணமானது ஆரியர் தாக்கம் ஏற்படாமல் நடைபெற்ற திருமணங்கள் ஆகும். பண்டைய தமிழரின் திருமண சம்பிரதாயங்களுக்குட்பட்டு சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தில் முருகன், வள்ளி திருமணம் (மயில்கட்டு) இடம்பெறுகின்றது. மயில்கட்டுத் திருவிழாவும் பண்டைத் தமிழரைப் போன்று அதிகாலை வேளையில் இடம்பெறுகின்றது. இது மரபை பேணுவதற்கும் அதன் தனித்துவத்திற்கும் காரணமாகும்.

அகநானூற்றில் 86, 138ம் பாடல்களில் பழந்தமிழர்களின் திருமணமுறை பற்றி இடம்பெற்றுள்ளது. திருமண நாளன்று உழுத்தம் பருப்புடன் கூட்டிச்சமைத்த உணவுடன் பக்குவமாக குழைந்த பொங்கலுடன் வரிசையாக கால்நட்டுக் குளிர்ந்த மணப்பந்தல் முழுவதும் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட வெண்மணல் பரப்பி மனையில் விளக்குகளை ஏற்றி மலர்மாலைகளை பந்தல் முழுவதும் நெருக்கமாக தொங்கவிட்டு மிக அழகாக அலங்கரித்தும் திருமண வீட்டில் மணவிளக்குகளால் ஒளிபெறச் செய்தனர் என்றும் தலையில் நன்னீர்க் குடத்தினைத் தாங்கி அந்நீரால் மணமக்களை நீராட்டினர். உரோகிணி நன்நாள் குற்றமற்றதும் வாழ்விற்கு நன்மையளிக்கும் எனும் நோக்கில் அடர்ந்த இருள் நீங்கி விடியல் தொடங்கும் வனப்புமிகு நேரத்தில் திருமணம் நடைபெற்றது என அகநானூற்றில் 86ம் பாடல் வெளிப்படுத்தி நிற்பதனை மேல்வரும் பாடல் வரிகளின் மூலம் அறியலாம் (புலியூர்க்கேசிகன், 2010:165).

“உழுந்தலைப் பெய்த கொழுந்களிமிதவை…..
தண்பெரும் பந்தர்த் தருமணல்ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கணைஇருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்”

இப்பாடல் வரிகளை ஆழ்ந்து நோக்கும் போது இன்று நடைபெறும் தமிழர்கள் திருமணத்திற்கும் பண்டைய தமிழரின் திருமணத்திற்குமிடையே வேறுபாடுகள் பல காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இன்றைய திருமணத்தில் நடைபெறும் வடமொழி மந்திரங்கள் உச்சரிக்கப்படுவதில்லை. புரோகிதர் பங்குபெறுவதில்லை, எரியோம்புதல் இடம்பெறுவதில்லை, தீவலமில்லை, அம்மிமிதித்தலில்லை, அருந்ததி காட்டலில்லை, திருமாங்கல்யம் அணிவித்தல் முதலிய சடங்காசாரங்கள் இடம்பெற்றிருக்கவில்லை என்பது புலப்படுகின்றது.

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திலும் இப்பண்டைய மரபுப்படி திருமணம் நடைபெறுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. மயில்கட்டுத் திருவிழாவும் ஹோமம் நள்ளிரவில் வளர்க்கப்பட்டு அதிகாலை 5.00 மணிக்கு திருமணம் நடைபெறுகின்றது. பண்டைத் தமிழரின் திருமணமும் அடர்ந்த இருள் நீங்கி விடியல் தொடங்கும் வனப்புமிகு நேரத்தில் திருமணம் நடைபெற்றதைப் போன்று முருகன், வள்ளி திருமணமும் (மயில்கட்டு) நடைபெறுவதுடன், திருமாங்கல்யம் அணிவித்தலும் இடம்பெறுவதில்லை இவ்வாலயத்தில் அன்றைய காலப்பகுதியில் வெண்மணலை முற்றத்தில் பரப்பி, அலங்கரிக்கப்பட்ட மணப்பந்தலில் மயில்கட்டுத் திருவிழா நடைபெற்றது. தற்போது சில மாற்றத்திற்குட்பட்டாலும் பெரும்பாலும் பண்டைய தமிழரின் மரபுப்படி திருமணம் நடைபெறுகின்றது.

### ஆலயமும் சமுதாயமும்

மனித மனத்தின் வெளிப்பாடு பண்பாடு ஆகும். இதில் சமூகத்தளமும், சமூக மனமும் சமயத்தளத்தோடும், சமய மனத்தோடும் இணைவுற்று காணப்படுகின்றது. பெருஞ்சமயக்

கடவுளர்களுக்கு வருடந்தோறும் உற்சவத்தில் திருக்கல்யாணம் இடம்பெறுகின்றது. திருக்கல்யாணம் தமிழரின் யதார்த்த வாழ்வில் நிகழ்த்தப்படும் திருமணங்கள் போலச் செய்தலாகவேயுள்ளன. வாழ்வியல் சடங்கிற்கும் தெய்வீக திருக்கல்யாணச் சடங்கிற்கும் ஒற்றுமை உள்ளதால் சமூக மனமும் ஒன்றையொன்று பரஸ்பரத்தை பிரதிபலிப்பதாகவேயுள்ளது. தெய்வயானை இந்திரனின் சபையில் மறுபிறவியெடுத்தமையால் முருகனுக்கும் தெய்வயானைக்கும் உயர்ந்த ஆசார முறைப்படி திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. ஆனால் வள்ளியும் திருமாலின் மகளாக குறிப்பிடப்பட்டாலும் அவள் பிறந்த வேட குலமரபிற்கு ஏற்ப வள்ளி திருமணம் நடைபெறுகின்றது. சடங்கு அல்லது திருமணமானது அச்சமுதாயத்தினர் வாழும் இடத்தை பொறுத்து நடைபெறுகின்றது. அதாவது இங்கு சூழலின் தாக்கம் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் வேடகுல மரபின்படி சமஸ்கிருத தாக்கம் நடைபெறுவதற்கு முன்பாக தமிழருக்கு நடைபெற்ற திருமணமாக முருகன் வள்ளி திருமணம் நடைபெறுகின்றது.

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இடம்பெறும் முருகன் வள்ளி திருமணமானது ஆரியத்தாக்கம் தமிழர்களிடையே பரவுவதற்கு முன்னர் நடைபெற்ற திருமண நடைமுறைகள் இங்கு நடைபெறுகின்றது. பொதுவாக ஊரில் வாழும் மக்களின் வாழ்க்கையில் அவர்களுடைய குல தெய்வம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வாலயத்தின் தாக்கம் மக்களையும், மக்களின் செல்வாக்கு ஆலயத்தினையும் பாதிக்கின்ற ஒன்றாக காணப்படுகின்றது. சித்தாண்டி ஊரின் குடியேற்றமும் இவ்வாலயத்தை அண்டியதாகவே காணப்படுகின்றது. சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் அமையப்பெற்றதன் பின்னரே குடியேற்றம் நடைபெற்றது. இவ்வாலயத்தின் திருவிழா சித்தாண்டி ஊர்மக்களை மாத்திரம் ஒன்றிணைக்காமல் அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கின்ற ஒன்றாகவும், அம்மக்களிடையே பூசல்களை ஏற்படுத்தினாலும் ஒன்றிணைப்பை ஏற்படுத்தி மயில்கட்டுத் திருவிழாவை நடத்துகின்றனர்.

முருகன் காதல் செய்பவர்களின் விருப்பிற்குரிய தெய்வமாக இங்கு உருவகிக்கப்படுகின்றார். இவ்வாலயத்தில் மயில்கட்டுத் திருவிழா என்றாலே இவ்வூரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும்பாலானவர்களின் வீடுகள் திருமணக்கோலத்துடன் காட்சியளிக்கும். இத்தினங்களில் காதல் திருமணமும், வீட்டிலுள்ளவர்கள் பேசி முடிவு செய்த திருமணமும் இடம்பெறுகின்றது. இது இவ்மக்களின் மகிழ்விற்கு காரணமாக அமைவதுடன் துன்பத்தையும், பயத்தையும் ஏற்படுத்துகின்ற ஒன்றாக மாற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. குறிஞ்சி நிலத்திற்குரிய புணர்தல் ஒழுக்கம் பெற்றோருக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியதோ அத்தன்மையை இந்நாள் ஏற்படுத்தியுள்ளது. திணைகாத்துக் கொண்டிருக்கும் பெண்ணின் மீது ஆடவர்கள் காதல் பயிரை வளர்த்தது போன்று மயில்கட்டுத் திருவிழாவில் திருமணமாகாத ஆடவரும், பெண்டிரும் ஒருவரை ஒருவர் புணர்ந்து காதல்வயப்படுவதுடன் ஆடவர்களும், பெண்டிர்களும் தங்களுடைய காதலை வெளிப்படுத்துகின்ற ஒன்றாகவும் மயில்கட்டு திருவிழா மாற்றம்பெற்றுள்ளது. ஆரம்பகாலத்தில்

சித்தாண்டி பிரதேசத்திலும் அதனை அண்டியதாக காணப்படும் பிரதேசங்களில் சுபமுகூர்த்தம் பார்த்து திருமணங்கள் நடைபெறவில்லை. மயில்கட்டுத் திருவிழா நடைபெறுகின்ற நாட்கள் சுபமுகூர்த நாட்களாக இல்லாது இருப்பினும் அன்றைய தினம் சுபமுகூர்த்த நாட்களாகவே கருதப்பட்டு திருமணங்கள் நடாத்தப்பட்டது. மயில்கட்டுத் திருவிழா என்றால் அவ்வூரிலுள்ள ஆடவர், பெண்டிர்க்கு தீடீரென விவாகம் நிச்சயயமாகி அன்றைய தினமே திருமணம் நடாத்தப்பட்டது.

முருகன், வள்ளி திருமணம் காதல் திருமணமாகும். முருகன், வள்ளி திருமணத்தன்று அதே தன்மையுடைய திருமணம் நடைபெற்றால் பிரிக்க முடியாது என அதிக காதல் திருமணங்கள் மயில்கட்டுத் திருவிழா நாட்களில் இடம்பெறுகின்றன. இவை இறைவன் சார்பில் நிகழ்த்தப்பட்டவையாகும் ஆனாலும் அவை ஏற்றுக்கொள்ளப்படாத நிலையும் காணப்படுகின்றது. சாதாரண மக்களின் வாழ்க்கையில் இடம்பெறும் சம்பவங்களை சித்தரிப்பதாக மயில்கட்டு திருவிழா இடம்பெறுகின்றது. இறைவனாக இருந்தாலும் தனது மனைவியை விடுத்து வேறு ஒரு பெண்ணை பாரத்தல், களவுத் திருமணம் செய்தல் சமூகத்தினரால் ஏற்க முடியாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. தனது மூத்த மனைவியை விடுத்து வேறு மனைவியை திருமணம் செய்தல், பார்க்கச் செல்லுதல் முதலியன களவாகவே செல்வதாக பார்க்கப்படுகின்றது. இதனை மயில்கட்டுத் திருவிழா நன்கு உணர்த்துகின்றது. வள்ளியை திருமணம் செய்வதற்குச் செல்லும் போது கருவறையின் அறைகள் மூடப்பட்டு மறைமுகமாக ஆவாகணம் செய்தல், பின் ஆவாகணம் செய்த முருகனை மொக்காடிட்டு அழைத்துச் செல்லல் முதலியனவும் பின் திருமணம் நடைபெற்ற பின் ஏனைய இரு நாட்களும் அதிகாலை வேளையில் வள்ளியை பார்ப்பதற்கு களவாகச் செல்வதாகவே நடைமுறைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவை சமுதாயத்தில் தனது மூத்த மனைவியை விடுத்து மற்றுமொரு மனைவியிடம் ஆண் எவ்வாறு செல்கின்றாரோ அத்தகைய செயல்களின் வெளிப்பாடுகளைக் காட்டுவதாகவும் மக்களுக்கு ஓர் படிப்பினையையும் எடுத்துக் காட்டுகின்றது. முதல் மனைவிக்கும், இரண்டாவது மனைவிக்கும் இடையிலுள்ள ஏற்றத்தாழ்வை தெளிவாக வட்டமிட்டு காட்டுகின்றது. தெய்வயானைக்கு திருக்கல்யாணம் விமர்சையாக எல்லோருக்கும் தெரியும் வகையில் சடங்காசரங்களுடனும், வள்ளிக்கு மறைமுகமாகவும் நடாத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது ஆறுமுகசாமி மயிலிலிருந்து இறக்கியவுடனே வள்ளி வீற்றிருக்கும் கருவறைக்கு கொண்டு செல்லப்பட்டு திரைபோட்டு மூடிவிடுவர் இதனை யாராலும் பார்க்க முடியாது இச்செயற்பாடுகள் யாவும் அன்றாட மனிதனின் வாழ்வில் இடம்பெறும் செயற்பாடுகளை சித்தரிப்பதாகவேயுள்ளது.

### மயில்கட்டுத் திருவிழாவின் இன்றைய நிலை

ஆரம்பகாலங்களில் ஆலய முற்றத்தில் வெண்மணல் பரப்பி திருமணப் பந்தலுக்கான கால் நாட்டப்பட்டு வண்ணச் சேலைகளால் அலங்கரித்து மேலும் அவற்றை மெருகூட்டுவதற்காக தென்னங் குருத்தோலையினால் அலங்காரத் தோரணங்களைக் கட்டினர். ஆனால் இன்று பல்வேறு வர்ணங்களினாலும் பொலித்தீன், கடதாசியினால் அலங்கரித்து

கூடாரத்தை வள்ளி சன்னிதானத்திற்கு முன்பாக அமைத்து மின் விளக்குகளால் அலங்கரிக்கின்றனர். திருமணத்தின் போது வள்ளியம்மானை மாத்திரம் படிக்கப்பட்டதாகவும் இன்று இதனுடன் இணைந்து சமஸ்கிருத மந்திரங்கள், விசேட தீபாராதனை இடம்பெற்ற பின்னர் திருக்கல்யாணம் இடம்பெறுகின்றது. மயில்கட்டுத் திருவிழாவினை ஏனைய முருக ஆலயங்களின் வழக்கங்களுக்கேற்ப கொடியிறக்கத்தின் பின்னர் மேற்கொள்ள வேண்டும் என காலத்துக்கு காலம் நியமிக்கப்படும் ஆலய பிராமணரால் அடிக்கடி கூறப்படுகின்ற விடயமாக உள்ளது. இவை காலவோட்டத்தில் மாற்றப்படலாம் ஆனாலும் குடிமுறை வழக்கங்களின் வழி இடம்பெறுவதால் பல பூசல்களுக்கே இது வழிவகுக்கும்.

இவ்வாலயத்தை அண்டிய பகுதியிலிருக்கும் மக்கள் தங்களுடைய திருமணத்திற்குரிய சுபமுகூர்த்த நாளாக மயில்கட்டுத் திருவிழாவை தீர்மானித்து காத்திருந்தனர். இன்று பெரும்பாலும் இந்நாளிற்கு என எதிர்பார்க்காமல் வேறு நாட்களை திருமண நாட்களாக நிச்சயிக்கின்றனர். சிலர் பண்டைய மரபைப் பேணும் வகையில் மயில்கட்டு நாளில் திருமணத்தை நடத்துவதை கண்கூடாக பார்க்க முடிகின்றது. காதல் திருமணத்தை நடாத்துவதற்கும், காதலை இந்நாட்களில் வெளிப்படுத்தினால் தோல்வியடையாது என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. தங்களுடைய காதலிற்கான ஸ்திரத்தன்மையை மயில்கட்டுத் திருவிழா பெற்றுதரும் என இங்கு வாழும் சமுதாயத்தினர் நம்புகின்றனர்.

**நிறைவுரை**

சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் உருவாக்கத்தின் பின்னரே சித்தாண்டி எனும் ஊரில் மக்கள் குடியேறினர். இதனைக் கூர்ந்து நோக்கும் போது ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு புலப்படுகின்றது. முருகனுடைய காதல் திருமணமாகவே மயில்கட்டுத் திருவிழா இடம்பெறுகின்றது. இம்மயில்கட்டுத் திருவிழா பண்டைய தமிழர் முறைப்படி நடைபெறுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. வாழ்வியல் சடங்கிற்கும், தெய்வீகச் சடங்கிற்குமிடையே ஒப்புவமை நோக்கப்படுகின்றது. இம் மயில்கட்டுத் திருவிழாவில் இடம்பெறும் சடங்காசாரங்கள் சாதாரண பாமரமக்களுக்கும், இறைவனுக்குமிடையேயுள்ள தொடர்பு, ஒப்புவமை நோக்கப்பட்டு கடவுளர்களாக இருந்தாலும் சமூகவழக்கங்களுக்குட்பட்டு நடக்க வேண்டும், முதலாவது மனைவிக்கும், இரண்டாவது மனைவிக்குமிடையேயுள்ள ஏற்றத்தாழ்வு மயில்கட்டுத் திருவிழாவில் எடுத்தியம்பப்படுகின்றது. அந்தவகையில் சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தில் ஆகமம்சார்ந்த வழிபாடும், மரபுவழியான சம்பிரதாயங்களும், சமூகவழமைகளும் இணைவுற்று அடியொற்றி வழிபாடுகள் இடம்பெறுகின்றன. ஆலயத்தின் தாக்கம் மக்களையும், அவர்களின் வாழ்வியற்கோலத்திலும் ஆலயத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இங்கு ஒவ்வொரு நாளும் இடம்பெறும் திருவிழா குடிவாரியாக இடம்பெறுகின்றது. இது அம்மக்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதாக காணப்பட்டாலும் இறைபணி என்ற வகையில் பிணக்குகளை ஓரளவுக்கு சீர் செய்யும் வகையில் இடம்பெறுகின்றது.

## நேர்காணல்

சிவஸ்ரீ ச.வசந்தன் குருக்கள், வயது – 45, சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலய பூசகர், (2021.10.05).

உ.புஸ்பராஜ குருக்கள், வயது - 49, 2017 - 2018 வரை ஆலய பூசகர், (2021.10.13).

ந.தாமோதிரம், வயது – 65, 2017-2018 வரை வண்ணக்கராக கடமையாற்றியவர், (2021.10.05)

## உசாத்துணை

கந்தையா, வீ.சி., (1991), மட்டக்களப்பு சைவக்கோயில்கள், கூடல் வெளியீடு, மட்டக்களப்பு.

குணபாலசிங்கம், வ., (2013), திருப்படைக் கோயில்கள், சேயோன் வெளியீடு.

தங்கேஸ்வரி, (2008), கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

புலியூர்க்கேசிகன், (2010), அகநானூறு, சாரதா பதிப்பகம்.

மித்தியு, எஸ்.ஏ.ஐ., (2009), வரலாறு தரும் மட்டக்களப்பு, மட்டக்களப்பு.